/மின்னஞ்சல் மூலம்/

/பதிவுத்துறை/

அனுப்புநர்
பதிவுத்துறைத்தலைவர்,
பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை-28.

பெறுநர்
துணைப்பதிவுத்துறை, கோயமுத்தூர்.
மாவட்டப்பதிவாளர், கோயமுத்தூர்.
(இணைப்புடன்).

எண்.49120/கே2/2021 நாள்.13.12.2021

ஐயா,

பொருள்: பயிற்சி - பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி (13.12.2021 முதல் 31.01.2022 வரை) சிறப்பு பயிற்சி - கோயமுத்தூர் மையம் (அணி 04) Non Residential Training – கோயமுத்தூர் மாவட்டம் - நடைமுறை படுத்துதல் அழைப்பாணை பெறப்பட்டது - தொடர்பாக.

பார்வை:
1. துணைப்பதிவுத்துறை தலைவர், கோயமுத்தூர் கடித எண். 380/அ1/2021 நாள்.20.01.2021.
2. மாவட்ட வருவாய் அலுவலர் / முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர் ந.க.எண்.அ5/4883/2021 நாள்.02.12.2021.

---

பார்வை-2ல் காணும் கடிதத்தில் கோரியுள்ளவாறு, கோயமுத்தூர் மாவட்டத்தில் பணிபுரியும் கீழ்க்கண்ட உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் 13.12.2021 முதல் 31.01.2022 வரை நடைபெற உள்ள சுருக்கப்பட்ட அடிப்படைப்பயிற்சி (அணி-4)ல் கலந்து கொள்ளப் பணிக்கப்படுகிறார்கள்.

| வ. எண் | பெயர் திரு/திருமதி/செல்வி | பதவி | பணிபுரியும் பதிவு மாவட்டம் | பணிவரன்முறை நாள் |
|---|---|---|---|---|
| 1 | சி.செல்வராஜன் | உதவியாளர் | கோயமுத்தூர் துபதுத | 15.03.2013 மு.ப. |
| 2 | சு.பிருந்தா | உதவியாளர் | கோயமுத்தூர் துபதுத | 20.11.2018 மு.ப. |
| 3 | பெ.கதிரேசன் | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் துபதுத | 16.08.2017 மு.ப. |
| 4 | சு.கார்த்தி | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் துபதுத | 10.08.2020 மு.ப. |
| 5 | கு.ஜெய்கணேஷ் | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் துபதுத | 10.08.2020 மு.ப. |
| 6 | எம்.தமிழரசன் | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் துபதுத | 06.08.2020 மு.ப. |
| 7 | V.விக்னேஷ் | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 24.04.2017 மு.ப. |
| 8 | M.முத்துபிரபாகரன் | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 25.10.2017 மு.ப. |
| 9 | சு.திவ்யா | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 23.10.2017 மு.ப. |
| 10 | M.பூபதிராஜா | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 06.03.2019 மு.ப. |
| 11 | நா.ரேவதி | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 08.03.2019 மு.ப. |
| 12 | V.சங்கீதா | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 04.04.2019 மு.ப. |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | A.அமிர்தன் | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 01.03.2019 மு.ப. |
| 14 | T.கார்த்திகா | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 04.03.2019 மு.ப. |
| 15 | M.நித்யகல்யாணி | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 06.03.2019 மு.ப. |
| 16 | A.ராஜசிம்மன் | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 01.03.2019 மு.ப. |
| 17 | V.சந்தியா | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 04.03.2019 மு.ப. |
| 18 | S.கிருஷ்ணகுமார் | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 01.03.2019 மு.ப. |
| 19 | V.பாரதி | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 01.03.2019 மு.ப. |
| 20 | A.உதயபாரதி | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 15.03.2019 மு.ப. |
| 21 | மு.லலிதா | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 17.10.2019 மு.ப. |
| 22 | க.ஸ்ரீதேவி | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 09.03.2020 மு.ப. |
| 23 | M.ராம் | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 07.08.2020 மு.ப. |
| 24 | G.ரத்னவேலு | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 10.08.2020 பி.ப. |
| 25 | A.குருசங்கர் | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 10.08.2020 பி.ப. |
| 26 | R.திருப்பதி | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 10.08.2020 பி.ப. |
| 27 | M.காவ்யா | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 06.08.2020 மு.ப. |
| 28 | C.அந்தோணி லாரன்ஸ் | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 10.08-2020 பி.ப. |
| 29 | D.ரூபினி | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 06.08.2020 பி.ப. |
| 30 | S.P.மகாலெட்சுமி | இளநிலை உதவியாளர் | கோயமுத்தூர் | 06.08.2020 மு.ப. |

2. மேற்குறிப்பிட்ட நபர்கள் 12.12.2021 முற்பகல் 10.00 மணிக்குள் கோயமுத்தூர் சிறப்பு பயிற்சி மையத்தை சென்றடையும் வண்ணம் பணியிலிருந்து விடுவிக்குமாறும், இணைப்பில் கண்ட நடைமுறைகளை வழுவாது பின்பற்ற பயிற்சியாளர்களுக்கு அறிவுறுத்தவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் இத்துடன் பார்வையில் காணும் கடித நகல் அனுப்பி வைக்கப்படுகிறது. அக்கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு செயல்பட பயிற்சியாளர்களுக்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. மேற்குறிப்பிட்ட நபர்கள் மாவட்ட மாறுதலில் சென்றிருப்பின் / மருத்துவ விடுப்பில் இருப்பின் அவ்விவரத்தை உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் அனுப்பவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்./-13.12.2021
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

13/12/2021

பதிவுத்துறை தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

நகல்:

1. சம்மந்தப்பட்ட உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள். (துணைப்பதிவுத்துறை தலைவர், கோயமுத்தூர் மற்றும் கோயமுத்தூ மாவட்டப்பதிவாளர் மூலம்).
2. முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம்-638451.
3. கோ1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்.

சுதந்திர இந்தியா @ 75:
நேர்மையுடனான தற்சார்பு"

மாவட்டந்தோறும் 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி,
கோயம்புத்தூர் மையம் அணி எண்:4

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.அ.சாதனைக்குறள்,எம்.எஸ்ஸி(விவ).,<br>மாவட்ட வருவாய் அலுவலர்/ முதல்வர்<br>அரசு அலுவலர் பயிற்சி நிலையம்<br>பவானிசாகர்– 638 451.<br>ஈரோடு மாவட்டம் | O/o The Inspector General of Registration,<br>No.100, Santhome High Road,Chennai 600 028, |

ந.க.எண்: அ5/4883/2021 நாள்:02.12.2021

ஐயா,

| | |
|---|---|
| பொருள் | பயிற்சி - அரசு அலுவலர் பயற்சி நிலையம் - பவானிசாகர் இளநிலை உதவியாளர்/ உதவியாளர்களுக்கான மாவட்டந்தோறும் 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயற்சி (Day Scholar) - 13.12.2021 முதல் 31.01.2022 வரை - சிறப்பு பயிற்சி கோயம்புத்தூர் மையம் (அணி : 04) - (Non Residential Training) கோயம்புத்தூர் மாவட்டத்தில் - நடைமுறைப்படுத்துதல் - அழைப்பாணை அனுப்புதல். |
| பார்வை | 1. சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புநாள்: 07.09.2021<br>2. தலைமைச்செயலர் / பயிற்சித் துறைத் தலைவர், சென்னை அவர்களின் கடித எண்:பதுத/962/2021 நாள்: 09.09.2021<br>3. அரசு ஆணை எண்:117 மனித வள மேலாண்மைத்(பயிற்சி-1) துறை நாள்: 25.10.2021 |

*****

சட்டமன்ற பேரவை விதி எண்:110-ன் கீழ் 07.09.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிதாக அரசு பணியில் சேரும் பணியாளர்கள் மற்றும் பதவி உயர்வு பெறும் பணியாளர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலேயே அடிப்படைப் பயற்சி வழங்கப்படும் என்ற அறிவிக்கையின்படி பார்வை 3ல் கண்டுள்ள அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி கோயம்புத்தூர் மாவட்டத்தில் கீழ்க்காணும் கல்லூரியில் 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி (Non Residential Training) அளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி கோயம்புத்தூர் மாவட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு **13.12.2021** முதல் **31.01.2022** வரை நடைமுறைப்படுத்தப்படும்.

| மாவட்டம் | பயிற்சிமையம் |
|---|---|
| கோயம்புத்தூர் (அணி எண் – 4) | Tamilnadu Agriculture University, Lawley Road, PN Pudur, Coimbatore-641003 |

1. பயிற்சிக்கு அனுப்பப்படும் பயிற்சியாளர்களை **12.12.2021** முற்பகல் **10.00** மணிக்குள் தவறாமல் கோயம்புத்தூர் சிறப்பு பயிற்சி மையத்தில் ஆஜராகும் வகையில் முன் கூட்டியே பணியிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. இப்பயிற்சி சிறப்பினமாக தனியான அரசு ஆணை பெற்று நடைமுறைபடுத்தப்படும் பயிற்சி ஆதலால், **12.12.2021** காலை **10.00** மணிக்குள் ஆஜராகும் நபர்கள் மட்டுமே பயிற்சியில் சேர அனுமதிக்கப்படுவர். அழைப்புக் கடிதம் முன்னதாகவே அனுப்பப்படுவதால் சார் நிலை அலுவலகங்களிலிருந்து பயிற்சிக்கு வரும் நபர்கள் தாமதமாக விடுவிக்கப்படுவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

3. அவ்வாறு முற்பகல் 10.00 மணிக்கு வராதவர்களுக்கு பதிலாக வேறு அலுவலகங்கள்/ துறைகளிலிருந்து பயிற்சியாளர்கள் அழைக்கப்படுவதால் எக்காரணம் கொண்டும் முற்பகல் 11.00 மணிக்குப் பிறகு வரும் எந்தவொரு பயிற்சியாளருக்கும் அனுமதி அளிக்க இயலாது.இப்பயிற்சி மையத்தில் பயிற்சியாளர்கள் தங்கிப் பயிற்சி பெற இயலாது. தங்கள் சொந்த செலவில் பயிற்சிக்கு தினமும் வந்துசெல்ல வேண்டும். (Non Residential Training)

4. தங்கள் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட பயிற்சி பெற வேண்டியோர் பட்டியலின் படி முதுநிலை பாதிக்கா வண்ணம் கீழ்க்காணும் விவரங்களின் அடிப்படையில் பயிற்சிக்கு விடுவிக்கப்படுவோர் பட்டியலை உடனடியாக மின் அஞ்சல் வழியாக பவானிசாகர் அரசு அலுவலகத்திற்கு தவறாது அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | துறையின் பெயர் / பிரிவு | Registration |
| 2 | அணி எண் | 4 |
| 3 | பயிற்சிக் காலம் | 13.12.2021 முதல் 31.01.2022 வரை |
| 4 | ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை<br>(தங்களிடமிருந்து பெறப்பட்ட பயிற்சி பெற வேண்டியோர் பட்டியிலின் முதுநிலை வரிசைப்படி ) | 27 பணியாளர்கள்மட்டும் |
| 5 | பயிற்சியில் சேர்க்கப்படும் நாள் மற்றும் நேரம் | 12.12.2021 (பயிற்சியாளர்கள் அனைவரும் காலை 10.00 மணிக்கு தவறாது ஆஜராக வேண்டும்) |
| 6 | பயிற்சியாளர் சேர்க்கைப் பணி நடைபெறும் இடம் | Tamilnadu Agriculture University, Lawley Road, PN Pudur, Coimbatore-641003 |

**பயிற்சியாளர்கள் தம்முடன் கொண்டு வரவேண்டிய ஆவணங்கள் விவரம்**

1. ஒப்பந்தப்பத்திரம் (Surety Bond – ரூ.50,000/– க்கு குறையாமல்)
2. பணிவரன்முறைஆணைநகல் (Regularisation Order Copy)
3. ஆளறி அடையாளஅட்டை ( Identity Card)
4. பயிற்சியாளர்களின் புகைப்படம் ஒட்டி அலுவலகத் தலைவர் சான்றொப்பம் இட்டு பயிற்சிக்கு விடுவிக்கப்பட்ட ஆணை (Relieving Order)

காலை, மாலை தேநீர் மற்றும் மதிய உணவு பயிற்சி கல்லூரியிலேயே ஏற்பாடு செய்து தரப்படும்.

| வ.எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | உணவக முன்பணம் (200 x 37) | 7,400- |
| 2. | பஞ்சாயத்து நிதி | 120- |
| 3. | பயிற்சிக் கையேடு (ஆறு தொகுதிகள்) | 585- |
| | மொத்தம் | 8,105- |

ரூ.8,105/– (ரூபாய் எட்டாயிரத்து நூற்று ஐந்து மட்டும்)

பயிற்சி நிலைய இணையதளத்தில் (www.cstibhavanisagar.in- Online Admission) இணைய வழியாக 07.12.21 காலை 9.00 மணி முதல் 10.12.21 மாலை 05.00 வரையில் பயிற்சியாளர்கள் தங்களது விபரங்களை பதிவேற்றம் செய்து பயிற்சிக் கட்டணத்தை இணைய வழியாக செலுத்த வேண்டும். தொடர்புடைய ஆவணங்கள் பதிவிறக்கம் செய்து மற்றும் கையொப்பம் பெறுவது (பதிவிறக்கம் செய்த அதில் அலுவலரின் சான்றொப்பமிட்டு உடன் கொண்டு வருதல் வேண்டும்) தொடர்பாக கொடுக்கப்படும் விரிவான வழிமுறைகளை (பதிவேற்றம் தொடர்பான வழிமுறைகளுக்கு இணையதளத்தைப் பார்க்கவும்) பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. 53 வயதைக் கடந்தவர்கள் பயிற்சி பெறவிலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாணை நிலை எண்.4 ப.ம.நி.சீ (ப1) துறை, நாள்.18.01.2019–ல் வெளியிடப்பட்டுள்ள அறிவுரையை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. இப்பயிற்சி அணிக்கு தங்கள் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்ணிக்கையில் இளநிலை உதவியாளர்கள்/உதவியாளர்களை கண்டிப்பாக பயிற்சிக்கு அனுப்ப வேண்டும். சொந்த காரணங்களினாலோ அல்லது நிர்வாக காரணங்களினாலோ பயிற்சியாளர்களை அனுப்பத் தவறினால் அவ்விவரம் பற்றிய தகவல் அரசு செயலாளர் மனிதவள மேலாண்மைத் துறை சென்னை அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு பயிற்சிக்கு ஆஜராகாத நபர்கள் மீது அரசால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இக்கடிதம் பெற்றுக் கொண்டதற்கு ஒப்புதலையும் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையில் குறைவின்றி தவறாது பணியாளர்கள் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்ற உறுதியையும் முன்னதாகவே அனுப்பி வைக்க வேண்டும்.
3. தன்னிச்சையாக தமக்குத் தாமே வேண்டியதை செய்து கொள்ள இயலாத மாற்றுத்திறனாளிகள் மற்றும் உடல் நலமில்லாதவர்களை பயிற்சிக்கு அனுப்பக் கூடாது. அப்படிப்பட்டவர்களை பயிற்சி பெறுவதில் இருந்து விலக்களிக்க அந்தந்தத் துறைகளே அரசுக்கு எழுதி உத்தரவு பெற்றுக் கொள்ள வேண்டும்.
4. தங்கள் துறையில் சார்நிலை அலுவலர்களுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு பயிற்சிக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையில் பணியாளர்களை அனுப்ப துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
5. இந்தபயிற்சிக் காலம் முழுவதும் பயிற்சியாளர்களுக்கு பிறப்பு / இறப்பு போன்ற எதிர்பாராத நிகழ்வுகளுக்கு மட்டும் இரண்டு நாட்கள் மட்டுமே தற்செயல் விடுப்பு வழங்கப்படும். இரண்டு நாட்களுக்கு மேல் தற்செயல் விடுப்பு துய்க்கப்படுமானால் போதுமான பயிற்சிக் காலத்தை நிறைவு செய்யவில்லை எனக் கருதி பயிற்சியிலிருந்து விடுவிக்கப்படுவர். பயிற்சி நேரங்களில் எந்த காரணங்களுக்காவும் பயிற்சியாளர்கள் பயிற்சி நிலையத்தை விட்டுச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.
6. பயிற்சியாளர்கள் பயிற்சி நிலைய விதிகளை மீறனால், பயிற்சியினின்றும் உடனடியாக விடுவிக்கப்படுவதோடு, தனியர் மீது துறை நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படும் என பயிற்சியாளர்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
7. <u>இந்த பயிற்சி தொடர்பாக தேவைப்படும் இதர விளக்கங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 04295 – 240241</u> மின்னஞ்சல் முகவரி – principalcstibsr@gmail.com .

கோவிட் தொடர்பான பயிற்சியாளர்களுக்கு பொதுவான அறிவுரைகள் :-

1. பயிற்சிக்கு வரும் பயிற்சியாளர்கள் அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் கோவிட் - 19 பரிசோதனை 09.12.2021-ல் மேற்கொண்டு அதன் முடிவுகளை உடன் எடுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் பரிசோதனை முடிவு பெற இயலாதவர்கள் தங்களுடைய கைபேசியில் வரும் குறுந்தகவலை (SMS) உடன் எடுத்துவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். துறைத் தலைவர்கள் அலுவலகத்தலைவர்கள் மாதிரி எடுக்கும்

... தொடர்பு கொண்டு விரைவாக கோவிட் பரிசோதனை முடிவுகளை அறிவிக்க கேட்டுக் கொள்ள வேண்டும். பயிற்சிக்கு வரும் அனைத்து பணியாளர்களும் கோவிட்-19 தடுப்பூசி கட்டாயம் செலுத்தியிருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுவதுடன், அதற்கான சான்றுடன் சேர்க்கை அன்று வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு வரும் பொழுது கோவிட் - 19 தொடர்பான அறிகுறிகள் (காய்ச்சல், தொடர் இருமல், சளி) உள்ளது தெரியவந்தால் இப்பயிற்சிக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
3. கோவிட் தொற்றிலிருந்து குணமடைந்து வீட்டில் தனிமைப்பட்டுள்ளவர்களும் பயிற்சிக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
4. இந்த பயிற்சிக் காலம் முழுவதும் பயிற்சியாளர்களுக்கு எவ்வித விடுப்பும் மற்றும் அனுமதியும் துய்க்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.
5. பயிற்சியாளர்கள் அனைவரும் பயிற்சிக் காலம் முழுவதும் தமிழக அரசின் நிலையான கோவிட் - 19 வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்றப்பட வேண்டும்.
6. பயிற்சியின் போது முகக்கவசம் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும். பயிற்சிக் காலத்திற்கு முழுவதும் தினசரி முகக்கவசம் அணிந்து வர வேண்டும்.
7. கோவிட் - 19 வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாத பயிற்சியாளர்கள் உடன் பயிற்சியிலிருந்து விடுவிக்கப்படுவதுடன் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளத் துறைத் தலைமைக்கு பரிந்துரை செய்யப்படும்.
8. பயிற்சிக்கு வரும் பயிற்சியாளர்கள் பயிற்சி மையத்திற்கு Tamilnadu Agriculture University, lawley Road, PN Pudur, Coimbatore-641003 **12.12.2021 அன்று முற்பகல் 10.00 மணிக்குள் ஆஜராக வேண்டும்.**

முதல்வருக்காக